**வெலிமட பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன் , அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஜுலை 24 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து வெலிமட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டின் போது கொல்வனவு செய்திருந்த யூபீஎஸ் உபகரணத்தின் பெறுமதி ரூபா 13,500 தொகையாக இருந்த போதிலும் அதனை ரூபா 135,000 தொகை எனக் கணக்கீடு செய்திருந்தமையால் குறிப்பிட்ட சொத்துக் கணக்குகள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகைக் கணக்கு ரூபா 121,500 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த 04 கைவண்டிகளின் பெறுமதி ரூபா 99,200 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காகிதாகிகள் இருப்பு ரூபா 31,458 தொகை கணக்கீடு செய்யப்படாமையினால் அப்பெறுமதியினால் நடைமுறை சொத்துகள் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான பதவியணிக்கடன் பெறுமதி ரூபா 9,905 தொகை மிகையாக கணக்கீடு செய்திருந்தமையால் அப்பெறுமதியினால் சொத்துக்கள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான பதவியணிக் கடன் வட்டி வருமானம் ரூபா 375,854 தொகை எனினும், அதனை ரூபா 425,299 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் வருமானம் ரூபா 49,445 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 58,685 தொகை குறைவாகக் கணக்கீடு செய்திருந்தமையால் சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத்தொகை கணக்கு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) காணிகள் மற்றும் கட்டிடங்கள் ரூபா 17,817,634 தொகை கணக்கீடு செய்திருக்காமையால் அந்த பெறுமதியால் சொத்துக்கள் மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவுத்தொகை கணக்கு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 5,000,000 தொகை எனினும், அதனை ரூபா 10,798,781 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையினால் வருமானம் ரூபா 5,798,781 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 7,981,245 தொகை எனினும், அதனை ரூபா 10,798,652 தொகை என கணக்கீடு செய்திருந்தமையினால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 2,817,407 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்ததது.

(ஒ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் முற்கொடுப்பனவு என பதியப்பட்டிருந்த ரூபா 422,530 இற்கான பெறுமதி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 339,760 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் நடைமுறை சொத்துக்கள் ரூபா 82,770 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது தீர்க்கப்படாத களஞ்சிய முற்பணம் ரூபா 509,658 தொகை மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அந்தப் பெறுமதியினால் நடைமுறை சொத்துக்கள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காசு மீதி காசேட்டின் பிரகாரம் ரூபா 3,789,502 தொகை எனினும், வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் காசு மீதி ரூபா 3,822,502 தொகையாக இருந்தமையால் ரூபா 33,000 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

**1.3.3 பெற வேண்டியமற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 45,301,475 தொகை ஆக காணப்பட்டதுடன், நிலுவை வீதவரி ரூபா 2,923,478 தொகை மற்றும் ஏனைய வருமான நிலுவை ரூபா 42,377,997 தொகை அதில் அடங்கியிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கடன்கொடுத்தோர் ரூபா 30,300,544 தொகை ஆக இருந்தது.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 39,141,269 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதுள்ளது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) (i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152 | 36,000 | வர்த்தக அனுமதிப்பத்திரம் அறவிடப் படவேண்டிய 09 நிறுவனங்களில் இருந்து வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டம் மற்றும் 1523/16 இலக்க 2008 ஜனவரி 26 ஆம் திகதிய அதி விஷேட வர்த்தமானி | | (i) 2017 ஆண்டிற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு மேற்கொண்டிக்கவில்லை.<br>(ii) இறைச்சிக்காக விலங்குகள் அறுக்கும் இடங்களுக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளல் கட்டாயமாக இருந்த போதிலும், 02 ஊன் அறுப்பு நிலையங் களுக்காக அவ்வாறு 2017 ஆண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வில்லை. |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) விதி 156 | | பிரதேச சபை படிவம் 11 இன் பிரகாரம் கொடுப்பனவு காசேடு தயாரித்திருக்க வில்லை. |
| (ii) விதி 218 | | ஆண்டிற்கு ஒருமுறை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீது கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு சொத்துக்களின் பதிவுகளை நாளது வரை ஆக்கியிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை அத்தியாயம் xxiv பிரிவு 4 | 180,351 | சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள இரண்டு ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய பதவியணி கடனை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| | (i) நிதிப் பிரமாணம் 371 | 1,443,191 | 2000 ஆண்டிற்கு முன்னர் இருந்து 32 சந்தர்ப்பங்களில் பல்வேறு தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்த முற்பணங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரையும் தீர்த்திருக்கவில்லை. |
| | (ii) நிதிப் பிரமாணம் 571 | 2,377,945 | 144 சந்தர்ப்பங்களில் வைப்பு செய்திருந்த 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 02 வருட காலத்தை மிகைத்துள்ள வைப்புக்கிணங்க ஆதனவழிப்பு செய்திருக்கவில்லை. |
| (உ) | 2016 திசெம்பர் 26 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக் கையின் பந்தி 3.1 | | சபைக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பான எரிபொருள் எரிதல் தொடர்பான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ஒரு டிரக்டர் தவிர, சபைக்கு சொந்தமான ஏனைய வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிதல் பரிசோதனைகள் மேற்கொண்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 35,483,499 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,918,028 தொகை ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரித்த வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 5,284,730 | 1,795,461 | 4,107,925 | 1,278,448 | 4,733,940 | 3,483,937 | 2,496,555 | 987,382 |
| (ii) வாடகை | 3,282,860 | 2,866,027 | 4,107,925 | (16,539) | 2,562,240 | 2,897,749 | 2,698,608 | 199,142 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,522,600 | 2,162,850 | 2,492,780 | (329,930) | 2,279,600 | 2,275,711 | 2,362,007 | (86,085) |
| (iv) ஏனைய வருமானங்கள் | 12,410,110 | 11,985,566 | 11,750,900 | 218,131 | 12,891,870 | 10,037,838 | 9,837,901 | 199,937 |
| மொத்தம் | 23,500,300 | 18,809,964 | 22,459,530 | 1,150,114 | 22,467,650 | 18,695,236 | 26,252,405 | 1,300,376 |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 18.8 மில்லியன் ஆக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 22.4 மில்லியன் ஆக இருந்தது. வருட இறுதியில் ரூபா 1.15 மில்லியன் வருமானம் ஒன்றினை சேகரிக்க வேண்டியிருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்த போது நிலுவை வருமானம் 11.5 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

### 2.2.3 வாடகை

2011 ஆண்டிற்கான டென்டர் கடை வாடகை ரூபா 1,293,950 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 10,798,652 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 8,400,000 தொகை காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிருவகித்தல் , பொது மக்களின் சுகபோக வாழ்வு , வசதிகள் மற்றும் நலனோம்பு என்பன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

2017 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### (ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

முறைசாரா விதமாக குப்பைகளை போடுதல் மற்றும் தீ வைக்கும் இடமொன்று தென்னம்கும்புற உப அலுவல வளவில் பேணப்பட்டு வந்துள்ளது.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை தயாரித்திருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடாத்தப்படும் கிராமிய மகளிர் முன்னேற்ற நிலையம் ஒன்று தென்னேகும்புற உப அலுவலக கட்டிடத்தினை 10 வருடங்களில் நடாத்தப்பட்டு வந்த போதிலும் அதற்காக வாடகை ஒன்று அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) வெலிமட பிரதேச சபைக்கு புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக போதியளவு நிதியும் மற்றும் பொருத்தமான காணிகள் காணப்பட்ட போதிலும் தற்போது ஆண்டிற்கு ரூபா 1,164,000 தொகை வாடகை செலுத்தும் அடிப்படையில் வாடகை கட்டிடமொன்றிற்கு சபை எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

சபைக்கு சொந்தமான பொரலந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்ட பின்னர் மீண்டும் இணைப்பினை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 17,996 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளாமை

(அ) நீண்ட காலமாக திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு ஒன்று செய்யப்படாமையால் தென்னேகும்புர உப அலுவலகத்தில் உள்ள களஞ்சியம், கழிவறை மற்றும் ஏனைய கட்டிடங்கள் சேதமடைந்த நிலையில் அமைந்துள்ளது.

(ஆ) கெப்பெட்டிபொல உப அலுவலகத்தில் பேணப்படுகின்ற இசுரு முன்பள்ளி மற்றும் பகல் பாதுகாப்பு நிலைய கட்டிடங்களில் சில கதவுகள் மற்றும் யன்னல்கள் சேதமடைந்திருந்ததால் முன்பள்ளியில் கல்விகற்கும் பிள்ளைகளின் பாதுகாப்புக்கு சிக்கலாகியுள்ளது.

(இ) தென்னேகும்புற உப அலுவலகத்தில் பாதுகாப்பற்ற கட்டிடமொன்று களஞ்சியம் ஒன்றாக பயன்படுத்தப்படுவதுடன், 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 257,015 பெறுமதியான 260 இரும்பு குழாய்க்ள அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டுக் காணப்பட்டது.

#### 3.4.2 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 14,770,868 தொகைக்கான 04 கைடிரக்டர்கள், 02 டிரக்டர் டேலர்கள், மோட்டார் கிரேடர் ஒன்று, கம்பெக்டர் ஒன்று தீ அணைக்கும் வண்டி ஒன்று அலுவலக வளவில் மற்றும் கெப்பெட்டிபொல உப அலுவலகத்தில் நீண்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 பெறுகை

#### 3.5.1 பெறுகைத் திட்டம்

பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் இடையே கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

2017 ஆண்டின் போது பிரதேச சபை தொடர்பாக போதியளவு உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமை | | குறைபாடு |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) நூலகப் புத்தகங்களை சரியாக கணக்கீடு செய்திருக்காமை.<br>(ii) வருட இறுதியில் உள்ள இருப்பினை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்காமை |
| (ஆ) | வருமான நிருவாகம் | (i) கடந்த வருடங்களுக்கான நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (இ) | கடன்பட்டோர மற்றும் கடன்கொடுத்தோர் | (i) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை.<br>(ii) கடன்பட்டோர் மீதிகள் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| (ஈ) | நிலையான சொத்துக்கள் | (i) சில நிலையான சொத்துக்கள் பெறுமதி மதிப்பீடு செய்திருக்காமை.<br>(ii) சபை வளவில் பாதுகாப்பற்ற நிலையில் இயந்திரங்கள் உபகரணங்கள் நிறுத்தப்பட்டிருத்தல். |